# தமிழீழத் தேசிய விடுதலை முன்னணி
# தமிழீழ மக்கள் விடுதலை முன்னணி
# தியாகிகள்

1 தோழர் விஸ்வலிங்கம் விஸ்வானந்த தேவன் (மோகன்) கல்லுவம்,
15 10 1986ல் கடலில் கொல்லப்பட்டார். சிறீ லங்கா கடற் படை விடுதலைப் புலிகள் ஈரோஸ் ஆகியவற்றில் எவராவது ஒருவர் மீது சந்தேகமுண்டு

2 தோழர் கண்ணன் , முருங்கன்
*15 10 1986ல் கடலில் கொல்லப்பட்டார். சிறீ லங்கா கடற் படை, விடுதலைப் புலிகள் , ஈரோஸ் ஆகியவற்றில் எவராவது ஒருவர் மீது சந்தேகமுண்டு*

3 தோழர் நரேஸ்சர்மா (விக) காரைநகர்
*15 10 1986ல் கடலில் கொல்லப்பட்டார். சிறீ லங்கா கடற் படை, விடுதலைப் புலிகள் , ஈரோஸ் ஆகியவற்றில் எவராவது ஒருவர் மீது சந்தேகமுண்டு*

4 தோழர் அமலதாஸ் (தவம்) மாதகல்
1985ல் படகு விபத்தில் கொல்லப்பட்டார்

5 தோழர் அந்தோனிப்பிள்ளை ரஜீஸ் (அறிவு ஞானம்) தெல்லிப்பழை
இயக்கத்தின் மீதான விடுதலைப் புலிகளின் அழித்தொழிப்பின் போது கடத்தப் பட்டவர். புலிகளின் சாவகச்சேரி வதைமுகாம் மீது சிறீலங்காவின் வான்தாக்குதலின் (02 09 1990) போது உயிர் தப்பியவர். இதன் பின்னரே கொல்லப்பட்டிருக்க வேண்டும்

6 தோழர் இராசரத்தினம் இராஜருந்தவம் (தவம்) கல்லுவம்
இயக்கத்தின் மீதான விடுதலைப் புலிகளின் அழித்தொழிப்பின் போது கடத்தப் பட்டவர். புலிகளின் சாவகச்சேரி வதைமுகாம் மீது சிறீலங்காவின் வான்தாக்குதலின் (02 09 1990) போது உயிர் தப்பியவர். இதன் பின்னரே கொல்லப்பட்டிருக்க வேண்டும்

7 தோழர் சிவசுந்தரம் செல்வகுமார் (ரமணி) பொலிகண்டி, வல்வெட்டித்துறை
இந்திய ஆக்கிரமிப்புக் காலத்தில் களத்தில் நின்று அமைப்பாளராக செயற்பட்டவர். இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிய மறுநாள் புலிகளால் கடத்தப்பட்டவர். எப்போது கொல்லப்பட்டார் என்பது தெரியாது. பிறந்த திகதி 29 02 1964.

8 தோழர் தெய்வேந்திரன் (மதன்) மண்டான்
1988ல் புலிகளால் கடத்திக் கொல்லப்பட்டார்

9 தோழர் விவேகானந்த சர்மா (அன்ரன்) உடுவில்
இயக்கத்தின் மீதான விடுதலைப் புலிகளின் அழித்தொழிப்பின் போது கடத்தப் பட்டவர். புலிகளின் சாவகச்சேரி வதைமுகாம் மீது சிறீலங்காவின் வான்தாக்குதலின் (02 09 1990) போது உயிர் தப்பியவர். இதன் பின்னரே கொல்லப்பட்டிருக்க வேண்டும்

10 தோழர் தங்கராசா யோகராசா (குலம்) கரவெட்டி
1985ல் படகு விபத்தில் கொல்லப்பட்டார்

11 தோழர் கிருஷ்ணபிள்ளை சந்திரன் , கரவெட்டி
07 05 1985ல் பொலிகண்டி சனசமூக நிலையப் படுகொலைச்சுற்றிவளைப்பின் போது கொல்லப்பட்டார்

12 தோழர் கே தங்கவேலாயுதம் (கண்ணாடி) அம்பன், குடத்தனை
இயக்கத்தின் மீதான விடுதலைப் புலிகளின் அழித்தொழிப்பின் போது கடத்தப் பட்டவர். புலிகளின் சாவகச்சேரி வதைமுகாம் மீது சிறீலங்காவின் வான்தாக்குதலின் (02 09 1990) போது உயிர் தப்பியவர். இதன் பின்னரே கொல்லப்பட்டிருக்க வேண்டும்

13 தோழர் கனகரத்தினம் கஜேந்திரன் ,திக்கம்
இயக்கத்தின் மீதான விடுதலைப் புலிகளின் அழித்தொழிப்பின் போது கடத்தப் பட்டவர். புலிகளின் சாவகச்சேரி வதைமுகாம் மீது சிறீலங்காவின் வான்தாக்குதலின் (02 09 1990) போது கொல்லப்பட்டார்

14 தோழர் ஞானி கல்மடு, இராமநாதபுரம் (மந்திகை)
இயக்கத்தின் மீதான விடுதலைப் புலிகளின் அழித்தொழிப்பின் போது கடத்தப் பட்டவர். புலிகளின் சாவகச்சேரி வதைமுகாம் மீது சிறீலங்காவின் வான்தாக்குதலின் (02 09 1990) போது கொல்லப்பட்டார்

15 தோழர் சின்னத்தம்பி செல்வம் திக்கம்
இயக்கத்தின் மீதான விடுதலைப் புலிகளின் அழித்தொழிப்பின் போது கடத்தப் பட்டவர். புலிகளின் சாவகச்சேரி வதைமுகாம் மீது சிறீலங்காவின் வான்தாக்குதலின் (02 09 1990) போது உயிர் தப்பியவர். இதன் பின்னரே கொல்லப்பட்டிருக்க வேண்டும்

16 தோழர்இராசையா கரன் திக்கம்
இயக்கத்தின் மீதான விடுதலைப் புலிகளின் அழித்தொழிப்பின் போது கடத்தப் பட்டவர். புலிகளின் சாவகச்சேரி வதைமுகாம் மீது சிறீலங்காவின் வான்தாக்குதலின் (02 09 1990) போது உயிர் தப்பியவர். இதன் பின்னரே கொல்லப்பட்டிருக்க வேண்டும்

17 தோழர் தம்பிப்பிள்ளை சாந்தன் திக்கம்
இயக்கத்தின் மீதான விடுதலைப் புலிகளின் அழித்தொழிப்பின் போது கடத்தப் பட்டவர். புலிகளின் சாவகச்சேரி வதைமுகாம் மீது சிறீலங்காவின் வான்தாக்குதலின் (02 09 1990) போது கொல்லப்பட்டார்

18 தோழர் வைரவப்பிள்ளை சுரேஸ்வரன் (பழனி, சுப்பையா)கரவெட்டி
இயக்கத்தின் மீதான விடுதலைப் புலிகளின் அழித்தொழிப்பின் போது கடத்தப் பட்டவர். புலிகளின் சாவகச்சேரி வதைமுகாம் மீது சிறீலங்காவின் வான்தாக்குதலின் (02 09 1990) போது உயிர் தப்பியவர். இதன் பின்னரே கொல்லப்பட்டிருக்க வேண்டும்

19 தோழர் பசுபதி கதிரமலை (குஞ்சும்பு) கரவெட்டி
இயக்கத்தின் மீதான விடுதலைப் புலிகளின் அழித்தொழிப்பின் போது கடத்தப் பட்டவர். புலிகளின் சாவகச்சேரி வதைமுகாம் மீது சிறீலங்காவின் வான்தாக்குதலின் (02 09 1990) போது உயிர் தப்பியவர். இதன் பின்னரே கொல்லப்பட்டிருக்க வேண்டும்

20 தோழர் கலைதாஸன் ,கரவெட்டி
1985ல் இராணுத்தால் கொல்லப்பட்டார்

21 தோழர் கந்தசாமி ஜெகதீஸ்வரன் (நேரு) கரவெட்டி
1985ல் ரெலோவினரால் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்

22 தோழர் பாஸ்கரன்
1985ல் கிளிநொச்சி தகவல் நிலைய தாக்குதலுக்கு மறுநாள் காலை கரடிப்போக்குச் சந்தியில் இராணுவத்தால் கொல்லப்பட்டார்

23 தோழர் சிங்கன் தும்பளை
இயக்கத்தின் மீதான விடுதலைப் புலிகளின் அழித்தொழிப்பின் போது கடத்தப் பட்டவர். புலிகளின் சாவகச்சேரி வதைமுகாம் மீது சிறீலங்காவின் வான்தாக்குதலின் (02 09 1990) போது உயிர் தப்பியவர் இதன் பின்னரே கொல்லப்பட்டிருக்க வேண்டும்

24 தோழர் டேவிட் (முன்னாள் ரெலோ)
விபரம் தெரியவில்லை

25 தோழர் இராஜேந்திரன் கலட்டி, கொல்லன்கலட்டி
1985ல் சிறிலங்கா இராணுவத்தால் கொல்லப்பட்டார்

26 தோழர் ரூபன்
விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினரான ரூபனை வேதாரணியத்தில் வைத்து பொட்டு அம்மானால் கடத்தப்பட்டார்

27 தோழர் இளையதம்பி கனகசிங்கம் கரவெட்டி
07 05 1985ல் பொலிகண்டி சனசமூக நிலையப் படுகொலைச்சுற்றிவளைப்பின் போது கொல்லப்பட்டார்

# தோழர் நேருவுக்கு அஞ்சலி!

நேரு என அழைக்கப்படும் ஜெகதீஸ் எனும் விடுதலைப் போராளி தமிழீழ விடுதலை இயக்கத்தினரால் (TELO) படுகொலை செய்யப்பட்டார்.

தோழர் நேரு, அவரது தோழர்கள், நண்பர்கள் யாபேராலும் நேசிக்கப்பட்டவர். நீதியையும் மனிதாபிமானத்தையும் தமிழீழத்தில் நிலைநிறுத்துவதற்காக போராட்டத்தில் முழுமையாக ஈடுபட்டவர்.

இவர் ஆரம்பத்தில் தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியுடன் இணைவதற்கான பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டிருந்தார். பின் 1983 யூலைக் கலவரத்தைத் தொடர்ந்து தமிழீழ விடுதலை இயக்கத்தில் சேர்ந்து பயிற்சி பெற்றார். தமிழீழ 'விடுதலை' இயக்கத்துடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமையும், அதன் நடவடிக்கைகளிலேற்பட்ட அதிருப்தியும், அமைப்பினுள்ளேயே உட்கட்சிப் போராட்டம் நடாத்த எதுவித வாய்ப்புமின்மையாய் தமிழீழ விடுதலை இயக்கத்திலிருந்து அவரை ஒதுங்க வைத்தது.

எமது அமைப்பின் கருத்துக்களுடனும், வேலைத் திட்டத்துடனும் அவர் உடன்பாடு கொண்டிருந்தார். எம்முடன் இணைந்து செயல்படுவது பற்றி பேச்சுவார்த்தையிலீடுபட்டிருந்தார். எமது அமைப்பில் அங்கத்தினராய் இல்லாதபோதும் அவரது உயிர்ப் பாதுகாப்புக்கான கோரிக்கையின் நியாயம் கருதி அவரை எமது பாதுகாப்பான இடத்தில் வைத்திருந்தோம்.

10-10-84 அன்று அவர் இடத்திலிருந்து அவர் வெளியே செல்லும்போது தமிழீழ விடுதலை இயக்கத்தினரால் கடத்திச் செல்லப்பட்டு, பின்படுகொலை செய்யப்பட்டதாக எமக்குத் தகவல்கள் கிடைத்தன.

நாம் ஆரம்ப காலம் முதல் இதுபோன்ற கொலைகளைக் கண்டித்து வந்துள்ளோம். விடுதலைப் போராளிக்கெதிராக துப்பாக்கிகள் திருப்பப்பட்ட எமது கறை படிந்த வரலாற்றில் சுந்தரம், இறைகுமாரன், உமைகுமாரன், ஒபரோய் தேவன், மனோமாஸ்டர், ஜெகன் இன்று, நேரு என பட்டியல் நீண்டு செல்கிறது. விடுதலை இயக்கங்களால் திரைமறைவில் நூற்றுக்கணக்கான பேர் கொல்லப்பட்டதாக இந்தியப்பத்திரிகைகளே பகிரங்கமாக எழுதியுள்ளன (The News Week)

இன்று மக்கள் தாங்கொணாத் துன்பத்திற்கும், நெருக்கடிக்கும் முகம் கொடுக்கும் இந்நேரத்தில் இயக்கங்கள் போராளிகளைக் கொன்றொழிப்பது எமக்கு [illegible] எதிரிக்கு சாதகமானதுமாகும்.

ஓர் இயக்கத்துக்குள் போராளிகளுக்கு அடிப்படை ஜனநாயக உரிமைகள் இருக்க வேண்டும். போராளிகள் தமது கருத்துக்களை சுதந்திரமாக வைக்கவும் தமது கருத்துக்காகப் போராடவும், கருத்து முரண்பாடு தீர்க்கப்படமுடியாத பட்சத்தில் அவர் அமைப்பைவிட்டு வெளியேறவும், பின் இயங்கவோ அன்றி ஒதுங்கி இருக்கவோ அனுமதிக்கப்பட வேண்டும். அப்போதுதான் விடுதலை இயக்கங்கள் ஆரோக்கியமாக வளரவும் எமது விடுதலைப் போராட்டம் ஆரோக்கியமான பாதையில் செல்லவும் முடியும்.

இதையுணர்ந்து எதிர்காலத்திலாவது சக போராளிகளுக்கு எதிராக துப்பாக்கிகளை திருப்பாது முழுசக்தியையும் பிரயோகித்து ஐக்கியப்பட்டு துப்பாக்கிகளை எதிரிக்கெதிராக திருப்புவது எமது விடுதலைப் போராட்டத்துக்கு நன்மை பயப்பதாகும்.

" விடுதலைப் போராளிகளுக்கெதிராக திருப்பப்பட்ட துப்பாக்கிகள் போராளிகளைத் தொடர்ந்தழிக்குமா? அன்றி எதிரிக்கெதிராகத் திருப்பப்படுமா?"

**போராளிகள் அழிக்கப்படலாம், போராட்டம் அழிவதில்லை!**

**மனிதர்கள் தோற்கலாம், மானுடம் தோற்பதில்லை!**



தோழர் அமலதாஸ்

## தோழர் அமலன்

அமலன், தவம் என்று அழைக்கப்படும் மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்ட தோழர் அமலதாஸ் ஏப்பிரல் 30ம் திகதி தமிழீழத்தில் இருந்து தமிழ் நாட்டிற்கு சென்று கொண்டிருந்தபோது கடலில் ஏற்பட்ட விபத்து ஒன்றில் காலமாகிவிட்டார். தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியுடன் இணைந்து செயற்பட ஆரம்பித்த தோழர் அமலன், இணைந்த காலத்தில் இருந்து நம்பிக்கையுடனும், விசுவாசத்துடனும் செயற்பட்டு வந்தார். எந்த தடையையும் எதிர்கொள்ளும் மனவுறுதி படைத்தவர் தோழர் அமலன். ஆரம்பத்தில் பெரும்பாலான இளைஞர்களைப் போல் உணர்ச்சி வேகத்தில் அமைப்பிற்கு வந்தாலும், 'சுத்த இராணுவக் கண்ணோட்டமுள்ள' இயக்கங்களை நாடிச் செல்லாது சரியான மக்கள் இயக்கம் ஒன்றைக் கட்டவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து எம்முடன் செயற்பட்டு வந்தார். தமிழீழத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையிலான தொடர்புகளைப் பராமரிப்பதிலும், இயக்க இராணுவ நடவடிக்கைகளில் பங்குகொள்வதிலும் முன்னணியில் நின்று செயற்பட்டுவந்தார். தோழர் அமலன் இயற்கைக்கு எதிரான போராட்டத்துடன் (கடல் தொழில்) தனது வாழ்க்கையை ஆரம்பித்து ஒரு போராளியாக எம்மை விட்டுப் பிரிந்தார். எல்லோருடனும் அன்பாகவும், கலகலப்பாகவும் பழகும் அமலன் இருக்கும் இடம், என்றும் அமைதியாக இருப்பதில்லை; கலகலப்பாகவே இருக்கும்.

அரசியலை கற்பதில் ஊக்கமெடுத்து வந்ததுடன் கிராமங்களிற்குச் சென்று மக்களை அணிதிரட்ட வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்தார். இவர் இறப்பதற்கு சில தினங்களின் முன்னர் கூட "நான் நிறைய அரசியல் கற்க வேண்டும்.



தோழர் கவிதாசன்



தோழர் அருள்

அமைப்பு, ஊழியர்களுக்கு அரசியல் கல்வி கொடுப்பதில் அக்கறை காட்டுவது போதாது என விமர்சனம் செய்தார். தோழர் அமலனது விமர்சனத்தை ஆதாரமாகக் கொண்டு சரியான அரசியலை எம் இயக்கத் தோழர்களுக்கு வழங்கி சரியான பாதையில் போராட்டத்தை முன்னெடுப்பதே, அவருக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்.

களத்தில் செல்லும் போதும், கடலில் செல்லும் போதும் தோழர் அமலனை நினைவு கூர்வோம்.

**தோழர் கலைதாசன்**

கடந்த மார்ச் மாதம் இராணுவத்தினரின் கிராமச் சுற்றிவளைப்பின் போது துன்னாலையைச் சேர்ந்த தோழர் கலைதாசன் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். தமிழீழ தேசிய விடுதலை முன்னணியுடன் அண்மையில் இணைந்து கொண்டாலும் மிக உற்சாகமாக கிராம மக்களிடம் சென்று வேலை செய்து வந்தவர். குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களிடம் உயர்சாதியினதும், அவர்களுக்குத் துணை போகும் இயக்கங்களினதும் நெருக்கடிகள் மத்தியில் வேலை செய்து வந்தவர். இவருக்கு எமது வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

> நமது உரிமைகளுக்காகப் போராடும் ஆசையால் ஒன்றுதிரண்டு ஒருவரோடு ஒருவர் பிணைந்து நின்று நாமெல்லாம் நண்பர்கள் என்ற உண்மையை உணர்ந்தாலன்றி, நமது வாழ்வை நாம் போராடிப் பெறமுடியாது.
>
> —கார்க்கி

**தோழர்கள் அருள், கேசவன்**

கரவெட்டி சண்டிக்குளத்தடியைச் சேர்ந்த தோழர்கள் அருள், கேசவன் (சுக்கு மாமா) ஆகிய இருவரும் மே 10ந் திகதி இராணுவத்தினரால் நெல்லியடியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டனர். எம் அமைப்புக்கு புதிய தோழர்களாக இருந்தாலும், மாணவர்களை அணிதிரட்டுவதிலும், கிராம மக்களிடம் சென்று வேலை செய்வதிலும் தீவிரமாக ஈடுபட்டவர்கள். இவர்களது இந்த இழப்பு ஈடுசெய்யப்பட முடியாது.

தோழர்கள் அருள், கேசவன் ஆகியோருக்கு எமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



தோழர் கேசவன்